TIRUMAKKOTTAI
TALA VARALARU

by

உ

சிவமயம்

திருமக்கோட்டை
ஸ்ரீ ஞானபுரீஸ்வரஸ்வாமி தல வரலாறு

இஃது

திருமக்கோட்டை ஸ்ரீ ஞானபுரீஸ்வரஸ்வாமி தேவஸ்தான

வெளியீடு.

55186

RAMANATHA PILLAI (P)

எழுதியவர்:

ப. இராமநாத பிள்ளை,

தமிழ்ப் பண்டிதர், மன்னார்குடி.

மன்னார்குடி 'பாரதி அச்சுக்கூடத்தில்' பதிப்பிக்கப்பெற்றது.

விஜய ஆண்டு, வைகாசித் திங்கள்

1953.



CONNEMARA PUBLIC
17 JUN 1956

உ

சிவகுகமயம்.

திருமக்கோட்டை
ஸ்ரீ ஞானபுரீஸ்வரஸ்வாமி தல வரலாறு.

17 JUN 1956

நின்றும் இருந்தும் கிடந்தும் நினை
என்றும் சிவன்றாள் இணை.

இறைவன் ஆன்மாக்கள் உய்யும்வண்ணம் எளிவந்து எழுந்தருளி இருக்கும் தலங்கள் மிகப் பல. அவைகளின் பெருமைகள் சமயாசாரியர்கள் மூவராலும் விளக்கமுற்றன. சில தலங்கள் அவர்களுடைய அருளிப்பாடல்களை நேரே பெற்று விளங்குவன. சில தலங்கள் வேறு சில பாடல்களில் இடம்பெற்று விளங்குவன. சில தலங்கள் நாட்டுத்தொகை ஊர்த்தொகை இவைகளின் வாயிலாக சிறப்பிக்கப்படுவன. நேரே பாடல் பெறாத தலங்கள் வைப்புத் தலங்களென வழங்கப்பெறும். ஒரு வகையில் ஒரு தலத்தைச் சென்று தெரிசிக்கும்போது நாயன்மார்களுடைய திருவுள்ளம் வேறு ஒரு தலத்தை அங்கு நினைவுக்கு கொண்டுவருமானால் அது ஒரு தனிச் சிறப்பென்றே கருத இடமுண்டு. இதனால் நேரே பாடல்பெற்ற தலங்களோடு வைப்புத் தலங்களும் ஒத்த பெருமையை யுடையன என ஒருவாறு விளங்கும். சில தலங்கள் பாடல் பெற்றும் கறையானால் பாடலிழந்தன என்பது திருமுறை வரலாற்றிற் கண்ட உண்மை. இதனோடு இணையொத்த கோவிலூர் திருஞானசம்பந்தர் பாடல் பெற்று விளங்கும்போது இத்தலமும் பெற்றேயிருந்திருக்க வேண்டும். இப்போது பதிகம் இல்லையாயினும் தலம் மிகப் பழமையானதே.

இத்தலம் தஞ்சாவூர் ஜில்லாவில் மன்னார்குடி தாலுகாவிலுள்ளது. மன்னார்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து முத்துப்பேட்டை செல்லும் வழியில் 10வது மைலிலுள்ளது. மழைக்காலங்களிலும் போக்குவரத்துக்கு இடையூருக இராதது. சாலைமட்சாலை. வண்டிகள் கிடைக்கும். முத்துப்பேட்டை புகைவண்டி நிலையத்திலிருந்து மன்னார்குடிக்கு வரும் வழியில் சுமார் 12 மைலிலுள்ளது. மன்னார்குடி — பட்டுக்கோட்டை பஸ் மார்க்கத்தில் 10வது மைலில் கீழக்குறிச்சியிலிருந்து கிழக்கே 2½ மைல் தூரத்தில் இத்தலம் இருக்கிறது. வருகின்ற அன்பர்கள் திருக்கோயிலின் மேலவீதியிலேயே இறங்கலாம். இத்தலத்து கோவிலின் கீழ வீதிக்குக் கிழக்கே சம்பங்குளமும், வடக்கே கேணிக் குளமும், மேற்கே பிடாரி குளமும் தெற்கே அரண்மனைக்குட்டைக் குளமும் ஆக ஐந்திற்கு மேற்பட்ட குளங்களும், சிறு குட்டைகளும் இத்தலத்தை அழகு செய்கின்றன. இத்தலத்துக்கு சிறப்பான ஏரி ஒன்றுண்டு. அதற்குத் திருமேனி ஏரி என்று பெயர். அதிலிருந்து கிழக்கே திருமேனி ஆறு ஓடுகிறது. திருக்கோவிலுக்குச் சொந்தமான நிலங்களுக்கு பெரும்பாலும் பாய்வது இவ்வாறே. ஊரின் தட்ப வெப்பநிலை 98°. இத்தலத்து பெரும்பாலும் புன்செய் நிலங்களே மிகுதி. சுற்றுப்புறங்கள் சோலையடர்ந்தனவாக இயற்கைக் காட்சிக்கு இன்பம் பயப்பென. இவ்வூரின் ஜனத்தொகை சற்றேறக்குறைய 3000 இருக்கும். இங்கு பெரும்பாலும் விவசாயமே நடைபெறுகிறது. அதிலும் புன்செய் தானியங்களும் மரப்பலன்களுமே கிடைக்கின்றன, நெல் விவசாயம்

சிறிது குறைவு. சிறுபான்மை பாய் பின்னுதல் தொழிலும் நடைபெறுகிறது. இங்கு சனிக்கிழமைதோறும் ஒரு பெரிய சந்தை கூடுவதுண்டு. இங்கு மருத்துவச் சாலையும் தபால் நிலையமும் ஜில்லாபோர்டு உயர்தர ஆரம்ப பாடசாலையும் இருக்கின்றன. தல வழிபாட்டிற்காக வருகின்ற அன்பர்கள் தங்குவதற்கு குருபூஜைமடம் இருக்கிறது. கோவிலுக்குச் சொந்தமான சத்திரம் ஒன்றுண்டு. இத்தலம் பஞ்சாயத்துபோர்டு நிர்வாஹத்தில் சுகாதாரம் முதலிய வசதிகளைப் பெற்றுவருகிறது. பொதுவாக நீர்வசதியும் மன ஒருமைப்பாட்டிற்காக வந்து தங்குவோருக்கு ஏற்ற இடவசதியும் அமைந்து விளங்குவது இத்தலம்.

திருக்கோவில் திருவீதியுள்பட மூன்று சுற்றுலயங்களை (பிராகாரம்) உடையது. திருக்கோவிலுக்கு ராஜகோபுரமில்லை திருக்கோவிலின் நீளம் 283 அடிகள், அகலம் 211 அடிகள். திருக்கோவிலின் முன்பு தீர்த்தம் இருக்கிறது. அத்தீர்த்தம் பெருநோய் பிரித்த தீர்த்தமென்றும், ஞானதீர்த்தமென்றும் வழங்கும். வடமொழியில் குஷ்ட நிவாரண தீர்த்தம் எனக்கூறுவர். திருக்குளத்தின் படித்துறையில் ஒரு கருங்கற்றூண் உள்ளது. அதன் உச்சியில் நந்தி விளங்குகிறார். அத்தூணில் மேற்குப் பார்க்க கிருத சேகர மகாராஜாவினுடைய உருவம் காணப் படுகிறது. இத்தூண் பிர்மதண்டமென வழங்கப் பெறுகிறது. தூணிற்கு எதிரில் சிறு பாதங்கள் காணப் படும். அவை விஷ்ணு பாதங்கள். திருக்கோவிலின் உள் முதல் பிராகாரத்தில் மடப்பள்ளிக்கு முன் வசிஷ்ட ரிஷி எழுந்தருளியிருக்கிறார். அவர் சந்நிதி வடக்குப் பார்த்தது. முதல் பிராகாரத்தையும் இரண்டாவது

பிராகாரத்தையும் இணைப்பது மூன்று நிலைகளையுடைய சிறிய கோபுரம். அக்கோபுர வாயிலின் முன்பக்கம் திருமுற்றவெளி என்று வழங்கப்பெறும். முற்றவெளியின் வடகிழக்குக் கோடியில் வசந்தமண்டபம் இருக்கிறது. இம்மண்டபத்தில் தேவஸ்தான காரியாலயம் இருந்து வருகிறது. இரண்டாம் பிராகாரத்துக் கோபுரவாயிலின் இடது கைப்புறத்தில் கணபதியும், வலது கைபுறத்து குமாரக்கடவுளும் இருக்கின்றார்கள். குமாரக் கடவுளின் மண்டபத்தின் மேல் மணிமண்டபமிருக்கிறது. இத்தலத்து எங்குமே துவாரபாலகர் இல்லாமையும் கணபதியும் முருகனுமே துவாரபாலகராக இருக்கின்றமையும் அறிதற்குரியன. முன் வாயிலுள்ள கணபதி தெரிசன கணபதி என வழங்கப் பெறுகிறது. இவரை வழிபட்டு உட்புகுந்து வலமாக வந்தால் தென்பாகத்தில் ஸ்வாமி விமானத்தில் தக்ஷிணாமூர்த்தி எழுந்தருளி இருக்கின்றார். மேல் பிராகாரத்து முதற்கண் இருப்பவர் ஸ்தல விநாயகர். அவரது திருநாமம் கல்வெட்டுகளில் சொக்கவிநாயகர் என்று அழைக்கப்படுகிறது. இரண்டாவதாக சோமாஸ்கந்தர், தனியம்பிகை, கணேசர், சண்டேசுரர், முதலிய திருவுருவங்கள் விளங்குகின்றன. அவ்வுருவங்கள் மிக ஒளியும் அழகும் வாய்ந்தன. சிற்பத்திறம் செறிந்தன. மூன்றாவதாக சந்திரசேகரர் அம்மையோடு எழுந்தருளியிருக்கும் இடம். அடுத்து விஸ்வநாதர், பிரகதீஸ்வரர், லெக்ஷிமி, சரஸ்வதி, இவர்களுடைய கோவில்கள் பிரகதீஸ்வரர் தஞ்சை மன்னர் இவ்விடம் வந்தபோது நினைவுக்குறியாக நிலைபெறுவித்தார் என்று கர்ண பரம்பரைச் செய்தியால் அறியப்படுகிறது. வடமேற்குக்கோடியில் முருகன் வள்ளி தெய்

CONNEMARA PUBLIC LIBRARY
17 JUN 1956
MADRAS

கோவிலின் உள்கோபுரமும் முதற்பிரகாரமும்

வானேயோடு இருந்தருளும் மூர்த்தியாயும், எழுந்தருளு மூர்த்தியாயும் இருக்கின்றனர். வடக்குப் பிராகாரத்தில் நவக்கிரஹ கோவிலும் தலவிருக்ஷமும் இருக்கின்றன. ஸ்தல விருக்ஷம் பாரிஜாதம் (பவழமல்லிகை) அந்த விருக்ஷத்து பக்கத்தில் அம்பாள் கோவிலின் கர்ப்பகிர ஹத்து சுவரில் ஒரு கருங்கல் ஜன்னல் இருக்கிறது. அந்த ஜன்னலின் மேல் விளிம்பில் ஒரு சிறிய செதுக்கு வேலைப்பாடுள்ள துர்க்கை உருவம் உள்ளது. அது அன்பர்கள் பலராலும் கண்கண்ட தெய்வமாகப் பாராட் டப் பெற்றுவருகிறது. வடகிழக்குக்கோடியில் பைரவர், காலபைரவர், சந்திரன், சூரியன் இவர்களுடைய உரு வங்கள் இருக்கின்றன. இங்குள்ள சூரிய பகவானுக்கு நாள் தோறும் முதற்பூஜை நடைபெறுவது வழக்கம். அப்போது சர்க்கரை மட்டும் நிவேதிக்கப்படும். இத் தலத்துத் திருக்கோவிலுள் பதினாறு கணபதிகள் இட மிடங்கள் தோறும் விளங்குகின்றனர். அதனால் சோடஸ கணபதி ஸ்தலம் என்றும் வழங்கப்பெறும். திருமுன் வந்ததும் முதற்கண் இறைவனுடைய சிவலிங்கத் திரு மேனி காணப்பெறும் இறைவன் திருநாமம் ஞான புரீஸ்வரர் என்பதாகும். திருவுருசுயம்புமூர்த்தி என்பது சிவலிங்கத்தின் பாணத்தைப் பார்த்தாலே அறியப் பெறும். இங்கு கோவில் அமைதிக்கேற்ற அர்த்த மண்டபம், நர்த்தன மண்டபம் முதலிய மண்டபங்கள் அமைந்திருக்கின்றன. மகாமண்டபத்தில் கம்ப விநாயகர் இருக்கின்றார். தூணில் இருப்பதினால் இத் திருநாமம் உண்டாயிற்று போலும். திருவுரு சிறிதாய் இருப்பினும் வரதாக இருக்கின்றார், வழிபாட்டிற்கு வரும் அன்பர்கள் பலர் நேர்த்திக் கடைமைக்காக சிதறு

காய்கள் உடைத்து வருகிருர்கள். பிரார்த்தனைகள் பலவும் நிகழ்ந்து வருகின்றன. நடராஜப்பெருமாள் சிவகாமி அம்மையாரோடு எழுந்தருளி இருக்கின்ருர். இத்திருவுருவமும் அழகிய உருவங்களில் ஒன்று. இப்பெருமானுக்குப் பக்கத்திலேயே ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய நால்வரும் அஸ்திரதேவரும் பிரதோஷ நாயகரும், எழுந்தருளு மூர்த்திகளாக எழுந்தருளியிருக்கின்றனர். அவர்களை வழிபட்டு வெளி வந்தால் அம்மையின் திருக்கோவில். தெற்குப்பார்த்த சந்நிதி. அம்மையின் திருவுருவம் பெரியது. அம்மையின் திருநாமம் பெரியநாயகி பிருகன்னயகி என வடமொழியில் வழங்குவர். அம்மையின் மகாமண்டபத்து அம்மையின் திருவுருவமும், பள்ளியறைச் சொக்கரும் அம்மனும் எழுந்தருளியிருக்கின்ருர்கள்.

தீர்த்தம்:— ஞானதீர்த்தம் இராமன் தண்டகாரண்யத்தில் யாத்திரை செய்தபொழுது இங்குவர, வசிஷ்டர் இது ஒரு சித்தி க்ஷேத்திரமாக இருத்தலையறிந்து இராமனை இத்திருக்குளத்தில் மூழ்கிவர ஆணை இட்டார். அவ்வாறே ராமன் செய்ய, சித்தி சுத்தி ஏற்பட்டது. வசிஷ்டர் ஞான உபதேசம் செய்தார். அதனல் ஞானதீர்த்தம் எனப் பெயராயிற்று. இத்திருக் குளத்துக்கு பெருநோய் பிரித்த தீர்த்தம் என்று பெயருண்டு. கிருதசேகர மகாராஜாவின் குஷ்டநோய் இத்தீர்த்தத்தில் மூழ்கிப் போக்கிக் கொண்டமையால் இப்பெயருண்டாயிற்று.

சுற்றுக் கோவில்கள்:— இத்தலத்துத் திருக்கோவிலின் தென்கிழக்கு மூலையில் துரோபதையம்மன் கோவில் ஒன்றுண்டு. அது தருமர் கோவில் என்றும் வழங்கும்.

தென் மேற்கு மூலையில் ஒரு ஐயனார் ஆலயம் உண்டு. அது அடைக்கலம் காத்தார் என்றும் வழங்கும். மேற்கில் ஒரு விநாயகர் ஆலயமிருக்கிறது. வடமேற்கில் மற்றொரு ஐயனாருண்டு அவர் சித்தமல்லி ஐயனார் என்று அழைக்கப்படுகிறார். சித்தமல்லி என்ற கிராமத்தில் இவ்வையனார் இருந்தார் என்றும் இங்குள்ளார்களில் சிலருக்கு அவர் குலதெய்வமாக விளங்கிவந்தார் என்றும் அவர்கள் அடிக்கடி வழிபட இயலாமையால் உண்டான வருத்தத்தை ஐயனாரிடம் விண்ணப்பித்துக் கொள்ள ஐயனார் ஞானபுரீஸ்வரர் கோவில் வடமேற்கு எல்லையில் நாளை காலை எழுந்தருளுவோம், கோவில் கண்டருளுக! என்று ஆணையிட்டார் என்றும் மறு நாள் காலை அவ்வாறே நிகழ்ந்ததை நேரில் கண்ட ஊர் மக்களில் சிலர் வியந்து வழிபாடாற்றினார்கள் என்றும் கர்ணபரம்பரைச் செய்தி கூறுகிறது. இவ்வூரின் கிராம தேவதை மாரியம்மனும் பிடாரியும்ஆகும். பிடாரி பொன்னம்மை என்று வழங்கப்பெறுகிறார். அவ்வம்மையின் எழுந்தருளும் திருவுருவம், திருக்கோவிலிலே இருக்கிறது.

சிற்பச் சிறப்புக்கள்:— கோவில் மிகச் சிறியதாய் இருத்தலின் மிகுதியாக சிற்பங்களில்லை. ஆனாலும் திருக்கோபுரத்து கர்ப்பகிரஹங்களிலும் சுதையான திரு உருவங்கள் பல இருக்கின்றன. அவைகள் நெடுநாளைக்கு முன் ஆக்கப்பட்டன என்பது அவற்றின் அமைப்புத் திறத்திலிருந்து அறியப்படும். கற்பகிரஹங்களின் அடித் தளப் சதுரவரி, திரணைவரி, பத்ம வரி முதலிய வரிகள் பலவும் செதுக்குத் தூண்களும் பத்ம போதிகைகளும் மிக அழகாக இருக்கின்றன. நடராஜாவுக்கு எதிரில்

உள்ள தூண்கள் பூ வேலைப்பாடுள்ளவை கொடுங்கை கள் வாழைப் பூ மொட்டு தொங்கலாக வைத்து ஆக்கப் பட்டன. அம்மன் சந்நிதானத்தில் சில ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட வர்ண வேலை சித்திரங்கள் இருக் கின்றன. மகாமண்டபத்தில் உத்ஸவ அம்மன் பக்கத் தில் கீழ்ப்புறமாக சுவற்றில் ஓர் கற்சிலை இருக்கிறது. அது ஒரு மிளகு வியாபாரியாய் வந்த செட்டியாரின் திரு உருவம் என்று சொல்லப்படுகிறது. திருக்கோவிலுக்கு ஒரு தேர்தானுண்டு மூன்று அடுக்குகளையுடையது. இத்தேர் சித்திரம் செறிந்தது. அலங்கரித்த நிலையில் சுமார் 45 அடி உயரமிருக்கும். திருக்கோவிலுக்குச் சொந்தமாக சூரிய பிரபை மூன்று இடபவாஹனம், பூத வாஹனம், யானைவாஹனம், குதிரை வாஹனம், மூஷிக வாஹனம், ஆட்டுக்கடா, மயில் முதலிய வாஹ னங்கள் இருக்கின்றன. மரத்தால் செய்யப்பட்டவை. சிறந்த வேலைப்பாடுள்ளவை. வர்ணம் தீட்டப் பெற்றவை. திருக்கோவிலுக்குச் சொந்தமாக சுமார் ரூ 300—0—0 (முன்னூறு) பொறுமானமுள்ள திரு ஆபரணங்கள் இருக்கின்றன. ஒரு குடை இரண்டு சுருட்டிகளும் நான்கு (வெல்வெட்) தலையணைகளும் இருக் கின்றன. மற்ற திருக்கோவிலைப் போல பதினாறு உப சாரப் பொருள்களும் அடுக்குத் தீபங்களும், கிளை தீபங் களும் இருக்கின்றன. ஸ்வாமி சந்நிதியிலும் அம்பாள் சந்நிதியிலுமாக சர விளக்குகளும் அலங்கார தீபங் களும், கிளை குத்து விளக்கு, பெரிய குத்து விளக்கு முதலியவைகளும் இருக்கின்றன. படிச்சட்டங்கள் சிறியதும் பெரிதுமாக நான்குக்கு மேற்பட்டவைகளும் இருக்கின்றன.



CONNEMARA PUBLIC
JUN 19

புராண வரலாறு:—

தலம்: இத்தலம் ஞானபுரீசுரம் என்றும் பச்சிம பாரிஜாத வனம் என்றும் திருமக்கோட்டை என்றும், திருமெஞ்ஞானபுரம் என்றும் வழங்கும். இராமனுக்கு ஞான உபதேசம் செய்தமையால் ஞானபுரீசுரம் என்றும் பெயர் ஏற்பட்டது கிழக்கே பாரிஜாத வனம் ஒன்று வழங்கப்பெறும். திருக்களர் என்ற தலமிருப்ப பதால் இது பச்சிம பாரிஜாத வனம் என்று அழைக்கப் பெறுகிறது. (பச்சிமம்-மேற்கு) கிழக்கேயுள்ள திருக் களர் என்ற சிவதலத்தில் முருகப்பெருமானிடம் அறு பதினுயிரம் மகரிஷிகள் தாங்கள் எவ்வளவு வேதம் வேதாந்தங்களை எல்லாம் கற்றிருந்தும் யோக மார்க்கத் தில் பயின்றிருந்தும் மன அமைதி பெறுமல் தவிக்கின் ருேமே! என்று கேட்டார்கள். அதற்கு முருகன் வீடு பேற்றை எய்தும் உண்மை ஞானிகளுக்கும் கூட சிற்சில சமயங்களில் பெருங்காய மிருந்த பாண்டம் போல வந்து விஷய வாசனைகள் பற்றுவது இயற் கையே! அதுவே வாசனுமலம் என்று அறிவு நூல் களால் அறிவிக்கப்படுகின்றன. அதுவும் அகன்று உண் மை ஞானம் உறுதி கொள்ள வேண்டுமானல் பஞசாட் சர ஜெபம் செய்தல் வேண்டும். அதனை அனுபவ வாயி லாகச் சித்தி பெற்ற குருவின் மூலமாக சிந்தியுங்கள், செபியுங்கள் என்று திருவாய் மலர்ந்தருளினர். அந்த முனிவர்கள் சிவகுருவாகிய தங்களைத்தவிர வேறு அனு பவ குருவை அடைவது எப்படி? தேவரீரே உபதேசித் தருள வேண்டும் என்று வேண்டினர்கள். அருள் சுரந்து முருகன் அவ்வாறே உபதேசித்தார். அங்ஙனம் உபதேசித்த ரிஷிகளில் சப்த ரிஷிகள் சிறந்தவர்கள். அவர்களில் வசிட்டர் சிறந்தவர். அவ்வசிட்டர் இத்

தலத்து எழுந்தருளி பாரிஜாதத்தினடியிலே சிவலிங்கப் பெருமானை பிரதிஷ்டை செய்து நாள்தோறும் வழிபாடு செய்து வருவாராயினர். பூஜைக்குகந்த பெருங்கூத்தர் சிவலிங்கத்தின் வாயிலாக வெளிப்பட்டு உமக்கு வேண்டும் பேறு என்ன என்று வினவ, என்றும் நீங்காத ஞானம் வேண்டும். ஞானத்தை அடியேனுக்கு அருளிச்செய்தமையாலே இத்தலம் ஞானபுரீசுரம் என்று வழங்கப் பெறுதல் வேண்டும் என்று வரங் கேட்டார். அவ்வாறே இறைவன வரம் ஈந்தார். தாமும் ஞானபுரீசுரர் என்றும் நாமத்தை ஏற்றருளினர்.

தசாவதாரங்களுள் பூர்ணவதாரமான ஸ்ரீ இராமன் சத்தியம், வீரம், தயை, தருமம் உலகநடை இவைகளை நடத்திக்காட்ட வந்தவதரித்து, பொல்லாரை வென்றுநல்லாரைக் காப்பாற்ற வந்த இராமன் உலகத் துன்பத்தால் ஒடிந்த மனமுடையவராக வசிட்டரைத் தேடிப் புறப்பட்டார். புறப்பட்டவர் இத்தலத்து வசிட்டர் ஞான பரராய் இருப்பதையறிந்து எண்ணிய காரியம் இனிது நிறைவேறும் எனத்துணிந்து வசிட்டரை அடைந்தார். திருவடிகளில் வீழ்ந்தார் வணங்கினர். உலக மயக்கம் ஒழிய வேண்டும். நல்ல ஞானம் பெற வேணடும் என்று விண்ணப்பிக்க வசிட்டர் உபதேசித்தருளினர். அது முதல் இராமன், குலகுரு அளித்த ஞான வழியினலேயே குல குரு பூஜை செய்த சிவபெருமானை வழிபட்டு இத்தலத்தில் சில நாட்களிருந்தார். அப்போது வசிட்டரால் மேலும் மேலும் சிவ ஞானம் தெளிவு பெற தினந்தோறும் கூறப்பெற்றது. ஸ்ரீ ராமருக்கு மெய்க்கண் விளங்கப் பெற்றமையால் மெய்க்கண்நாதபுரம் என்றும் இத்தலம் வழங்கப் பெறுகிறது.

தீர்த்தம்: கிருத் சேகர சோழ் மகாராஜா என்பவர் முற்பிறவியில் செய்த தீவினை வசத்தால் குட்டம் என்ற பெருநோயால் பிணிப்புண்டார். அவர் அலையாத வைத்தியசாலைகள் இல்லை. உண்ணாத மருந்துக்கள் இல்லை. ஆன்ம முயற்சியால் ஆனமட்டும் முடிந்து இனித் தெய்வமே கதி என்ற சிந்தனையில் இறங்கினார். காசி சென்றார். கங்கையாடினார் இராமேச்சுரம் ஏகினார். கடலாடினார் என்ன செய்தும் நோய் நீங்காமையால் நொந்து நாட்டுக்குத் திரும்புகின்றவர் இத்தல எல்லையையடைந்தார். அடைந்ததும் வலக்கண் துடித்தது. வலத்தோள் துடித்தது. கருடன் முதலிய நற்பறவைகள் ஒலித்தன. இதனையறிந்து மகிழ்ந்த அரசன் இங்கு விசேடமிருக்கிறது என்று எண்ணி இத்திருக்குளத்தில் நீராடினார். எழுந்தார், தன்மேனியை நோக்கினார் வியந்தார் குட்டம் எல்லாம் குணமாயின, மேனி பொன் மேனியாயிற்று. பேரானந்தங்கொண்டார். எல்லாம் இறைவன் செயல் என்று எண்ணிக் கடவுளை வணங்கிப் புதிதாக நகரத்தை உண்டாக்கினார். திருவீதிகளையமைத்தார். கோவில் கட்டுவித்தார். நித்திய நைமித்திய பூஜைகளுக்கு வேண்டுவனவிட்டார். விழாக்கொண்டாடினார் இறைவனை விட்டு பிரிய மனமில்லாதவராக மகாராஜபுரம் என இப்போது வழங்கும் தலத்தில் கோட்டையைக் கட்டினார். வசித்தார், சிவபதம் அடைந்தார்.

தற்போதும் இத் தீர்த்தத்தில் தீராநோய் கொண்டார்கள் அன்புடன் ஆடினால் இஷ்ட சித்திகளைப் பெறலாம். பலர் மூழ்கி நோய் நீங்கப் பெற்றமைக்கு இன்னும் பல ஆதாரங்கள் உண்டு. இத்தலத்தில் விசாக உத்ஸவமும், விநாயகர் உத்ஸவமும், ஸ்கந்தர் ஷஷ்டி

உத்ஸவமும், நவராத்திரி உத்ஸவமும், கார்த்திகை உத்ஸவமும், மார்கழித் திருவாதிரையும், தைப்பூசமும், சிவராத்ரி உத்ஸவமும் பங்குனி உத்திரத் திருவிழாவும நடைபெறுகின்றன. இவைகள் காலத்திற்கேற்ப, செலவழித்து செய்யப்படுகின்றன. வெள்ளிக்கிழமைதோறும் அம்பாளுக்கு சகஸ்ரநாம அர்ச்சனை நடைபெற்றுவருகிறது.

கர்ணபரம்பரைச் செய்திகள்:- (1) வியாபாரிச் செட்டிகளில் பலர் இவ்வழியாக ராமேஸ்வரம் வரையில் காய். தானிய வியாபாரம் செய்வது வழக்கம். அதில் ஒரு செட்டியார் மிளகு பொதியை ஏற்றிவந்தார். இவ்வழியாகச்செல்லும் வண்டிகளுக்கு வரி வாங்குவது வழக்கம் அவ்வரி ஏற்றிச்செல்லும் பொருளுக்கு ஏற்றவாறு ஏறிக்குறைந்திருக்கும். ஆகையால் வாயில் காவலன் இந்தச் செட்டியாரை நோக்கி என்ன பொருளென்று கேட்டான். மிளகுப் பொதியாயிருந்தால் அதிக வரி கொடுக்க வேண்டிவருமே என்று அஞ்சிய செட்டியார் "பயறு" என்று கூறினர். காவலாளர் பயற்றிற்குரிய வரியை வாங்கி கோவில் கணக்கில் குறித்துக் கொண்டார். சிறிது தூரம் சென்றதும் வியாபாரத்திற்காக மூட்டையை அவிழ்த்தபோது பயறுயிருக்கக் கண்ட செட்டியார் பதை பதைத்து ஓடிவந்து காவலாளரிடம் மன்னிப்புக் கேட்க அவர்கள் இறைவனிடம் சென்று தெரிவிக்கச் சொன்னார்கள். அவர் தான் செய்த குற்றத்திற்காக அர்த்தஜாமத்தில் தினந்தோறும் மிளகு அன்னம் (சம்பாச் சாதம்) நிவேதித்தல் என்னுடைய தொண்டாக இருக்கட்டும் என்று வேண்டிக் கொண்டார். பிறகு பயற்றுப்பொதி மிளகுப்பொதி

யாயிற்று. அந்த நைவேத்யம் இன்றும் நடந்துவருகிறது. அந்தச் செட்டியார் திருவுருவமே முன் கூறியபடி அம்மன் கோவில் சந்நிதியில் இருக்கிறது.

இத் தலத்தைப்பற்றி இலக்கியங்களோ பாடல்களோ இல்லை.

இறைவன் ஞான உபதேச மூர்த்தியாக வசிட்டர் முதலிய முனிவர்களுக்கும் இராமன், கிருதசேகரன் முதலிய மன்னர்களுக்கும் பேரருள் வழங்கியும் இருக்கின்றார்.

ஆதலால் இத்தலத்து வழிபாடாற்றுவார் இருமை இன்பத்தையும் எய்துவர் என்பது துணிவு. ஆதலால் பெரிய நாயகி அம்மையோடு கூடிய பெருமானருளைப் பெற்று இருமை இன்பமும் எய்துவோமாக.

தேவாரம்.

ஞானத்தாற் றொழுவார் சில ஞானிகள்
ஞானத்தாற் றொழுவேனை நானலேன்
ஞானத்தாற் றொழுவார் கடொழக் கண்டு
ஞானத்தானை நானுந் தொழுவனே.

(அப்பர் சுவாமிகள் அருளியது).

திருவாசகம்.

தினைத்தனையுள்ள தோர் பூவினிற் றேனுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறு மெப்போது
மனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன்சொரியுங்
குனிப்புடையானுக்கே சென்றாதாய் கோத்தும்பீ.

(மாணிக்கவாசகர் அருளியது.)

கண்ணாரிந்தென்ன வென்னையுந் தன் கருணையினாற்
பொன்னார்கழல் பணித்தாண்டபிரான் புகழ்பாடி
மின்னேர் நுடங்கிடைச்செந்துவர்வாய்வெண்ணகையீர்
தென்னா தென்னா வென்று தெள்ளேணங் கொட்டாமோ.

(மாணிக்கவாசகர் அருளியது.)

ஸ்ரீ ஞானபுரீஸ்வரஸ்வாமிக்குச் சொந்தமாய் நஞ்சைஏக்கர் 408, செண்டு 25ம், புஞ்சை ஏக்கர் 514, செண்டு 83ம், ஆக நஞ்சை, புஞ்சை ஏக்கர் 923, செண்டு 8ம் இருக்கிறது.

1361ம் பசலி வரவு செலவு கணக்கு.

வரவு

		ரூ. அ. ப.
ஆரம்ப இருப்பு ரொக்கம்	...	169-9-0
பாங்கு இருப்பு ...	...	1142-8-1
நெல் விலையால் ...	...	369-13-8
நில வருமானம் ...	...	4758-3-4
தோப்பு ஆதாயம் ...	...	470-4-0
மனைப்பகுதி & கட்டிட வாடகை	...	798-12-0
உபய வரவு ...	...	30-0-0
மோஹினி ...	...	17-11-6
வட்டி ஆதாயம் ...	...	80-14-10
இதர வருமானம் ...	...	153-12-0
கடன் வகை ...	...	1000-0-0
டிக்கிரி வகை ...	...	607-8-9
	ஆக.	9599-1-2

செலவு

			ரூ. அ. ப.
ஆபீஸ் சம்பந்தமான சம்பளம் வகையரு		...	2325-7-0
ஆராதனை சிலவு		...	2058-11-5
மாசாந்திர ஏறுபடி & விசாகம் உற்சவ சிலவு			1382-15-5
கட்டிடம் ரிப்பேர் சிலவு		...	729-9-6
சர்க்கார் கிஸ்தி		...	780-10-10
வாகனாதி அங்கங்கள்		...	91-2-0
கல்வி சமயம்		...	23-4-0.
போர்டுபீஸ் & ஆடிட் பீஸ்		...	316-8-0
கோர்ட்டு சிலவு		...	250-0-0
இதர சிலவுகள்		...	455-15-3
பசலி கடைசி இருப்பு	Cash	15-0-0	
	Bank	606-1-5	
	Grains	563-12-4	
		1184-13-9	1184-13-9
		ஆக.	9599-1-2

நிர்வாஹம்:—

சென்னை H. R. E. போர்டார் அவர்கள் 57-வது சட்டப்படி திட்டம் (Scheme) B. O. 2746 Dt. 27—8—45-ல் வகுத்துள்ளார். அதன்படி ஒரு நிர்வாக உத்தியோகஸ்தரும், மூன்று தருமகர்த்தாக்களும் இருப்பார்கள்.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	17	இத்தலத்துக்கு சிறப்பான	இத்தலத்துக்குச் சிறப்பான
6	19	சித்தி சுத்தி	சித்த சுத்தி
7	22	சுதையான	சுதையாலான
10	10	என்றும்	என்னும்

திருமெய்ஞ்ஞானமுடையார் திருக்கோயில் கல்வெட்டுகளைப்பற்றிய செய்திகள் *

கோயிலில் உள்ள கல்வெட்டுகள்:—

இத்திருக்கோயிலில், சோழ மன்னர்களுள், முதலாம் இராசராச சோழமன்னன் காலத்தது ஒன்றும், முதல் குலோத்துங்க சோழன் காலத்தது ஒன்றும், மூன்றாம் இராசராச சோழன் காலத்தன நான்கும்; பாண்டியர்களுள், மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்திகள் புவனேகவீரன் குலசேகரதேவன் காலத்தன இரண்டும்; விசயநகர அரசர்களுள், அச்சுத தேவ மகாராயர் காலத்தது ஒன்றும், அரசன் பெயர் இல்லாமல் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் மூன்றும், ஆகப் பன்னிரண்டு கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

கல்வெட்டுக்களின் படியெடுப்பும் வெளியீடும்:–

இவைகள் அனைத்தையும் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பெற்ற கல்வெட்டுத் துறையாளர் படியெடுத்து அவைகளின் சுருக்கங்களை 1917 ஆம் வருடத்தின் கல்வெட்டு அறிக்கையில் (Annual reports on South Indian Epigraphy for the year ending March 1917 - Numbers 256 to 267) வெளியிட்டுள்ளனர்.

கோயிலின் பழமை:– திருக்கோயில் மகாமண்டபத்தில் உள்ளதும், பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்களைத் தலைகீழாக வைத்து நிறுத்தப்பெற்றிருப்பதுமாகிய, ஒரு தூணில் உள்ள "சாலை கலமறுத்த கோராஜ ராஜ

---

* இத்திருக்கோயில் கல்லெழுத்துக்களைப் படித்து ஆராய்ச்சி உரை எழுதியவர், திருவையாறு வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார் ஆவர்.

ராஜகேசரி பன்மற்கு யாண்டு பதின்மூன்றுவது தென் கரை பிர்மதேயம் பழைய, ஸ்ரீ செம்பியன்மாதேவி சதுர்ப்பேதி மங்கலத்து மகாஸபையோம்"— என்று தொடங்கும் கல்வெட்டே, மிகப் பழமையானதாகும். அக்கல்வெட்டு, இஞ்சி சூழ் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு கி. பி. 985 முதல் 1014 வரை சோழ மண்டலத்தை ஈடும் எடுப்புமின்றி ஆண்ட முதலாம் இராசராச சோழனுடையது ஆகும். அவன் அரியணை ஏறிய கி. பி. 985 ஓடு கல்வெட்டுப் பொறிக்கப்பெற்ற வருடமாகிய, பதின்மூன்றைக் கூட்ட கி. பி. 998 ஆகின்றது. அந்த ஆண்டே கல்வெட்டுப் பொறிக்கப் பெற்ற காலமாகும். எனவே இற்றைக்கு (1953–998) 945 வருடங்களுக்கு முற்பட்ட பழமையும், பெருமை யும் வாய்ந்தது இக்கோயில்.

இறைவரின் திருப்பெயர்:—

இத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறை வரின் திருப்பெயர் **திருமெய்ஞ்ஞானமுடையார்** என்பதாகும். இதை இக்கோயில் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

இறைவியாரின் திருப்பெயர்:—

இறைவியாரின் திருப்பெயர் **பெரியநாச்சியார்** என்பதாகும்.

இறைவியாரின் திருக்கோயிலைக் கட்டியவன்:—

இறைவியாரின் திருக்கோயிலை எடுப்பித்தவன், மல்லு ராவுத்தன் புத்திரன் திம்மப்பன் ஆவன். இச் செய்தியை, "வண்டாழை நாட்டு, திருமேற்கோட்டை நயினர், மெய்க்கு நயினர் கோயில் நாச்சியார், **பெரிய நாச்சியார்க்கு** மல்லு ராவுத்தன் புத்திரன், திம்மப்பர்

தன்மம் நவமாக உண்டாக திருக்கோவில் கட்டுவித்து"– என்னும் கல்வெட்டுப் பகுதி அறிவிக்கின்றது. [நவமாக-புதிதாக]

அம்மன் கோயில் கட்டப்பெற்ற காலம்:–

"சுபானு வருடம் கார்த்திகை மாதம் பத்தாம் தேதி பூர்வ பட்சத்து அஷ்டமியும் பெற்ற சோமவாரத்து நாள்"—என்று குறிக்கப்பெற்றுள்ளது. இதில் சாலிவாகன சகாப்தமோ அல்லது சகயாண்டோ குறிக்கப் படவில்லை. ஆதலின் இத்துணை வருடம் என்று துணிந்து கூறுவதற்கில்லை; எனினும் பிற்காலத்ததே.

திருமடம்:–

இத் திருமெய்ஞ்ஞானமுடையார் கோயிலின் தெற்கில், திருவீதியில் மூன்றும் இராசராசன் காலத்தின் முப்பத்தொன்றும் ஆண்டுக் கல்வெட்டில் இத்திருமடம் இருந்த செய்தி குறிப்பிடப்பெற்றுள்ளது.

சோழ மன்னர்களின் காலங்களில் அளிக்கப்பெற்ற நிவந்தங்கள்

முதற்குலோத்துங்கசோழன்காலத்தில் திருமெய்ஞ்ஞானமுடையார்க்கு ஒரு நுந்தா விளக்கு அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. நுந்தா விளக்கு எனினும் தூண்டாவிளக்கு எனினும் ஒக்கும்.

இக்கோயிலின் தெற்கில் திருவீதியில் இருந்த மடத்திற்கு, கற்பகப்பெருமான் இராஜராஜக் காடுவெட்டி என்பவர், வடுவூரில், தன் காணியான குலோத்துங்க சோழப் பேரரையன் சேவகப் பெருமாள் நிலத்துக்கு மேற்கு, பெரிய தூம்பு கண்ணாற்றுக்கு வடக்கு, பெருவழி வரம்புக்குக் கிழக்கு, வாய்க்காலுக்குத் தெற்கு ஆக இந்நடுவுட்பட்ட நிலம் நான்கு மாவை இறையிலியாகக் கொடுத்துள்ளான். இது நிகழ்ந்தது மூன்றும் இராசராச சோழனுடைய ஆட்சியாண்டு முப்பத்தொன்றிலாகும் [இறையிலியாக = அரசாங்க வரி இல்லாமல்].

இம்மடத்திற்குத் திருவாரூரில் வடக்கில் மடத்திருந்த, நல்லிசையாளி முதலியார் என்பவர் வடுவூரில் தம் காணியான வயலில் ஒரு மா நிலத்தை மடப்புறமாகக் கொடுத்துள்ளார். [மடப்புறம் = மடத்துக்கு நிவந்தமாக].

திருமெய்ஞ்ஞான முடையார்க்கு இவ்வூரில் இராஜ நாராயண வாய்க்காலுக்குத் தெற்கில் எட்டாம் கண்ணாற்றுச்சதுரத்திலும், இரண்டாம் சதுரத்துக் கீழ்க்கடையிலும், மத்திமவாய்க்காலுக்குத் தெற்கில் மூன்றும் சதுரத்திலும், ஊர் நத்தத்துக்கு மேற்கிலும், பிடாரி குளத்துக்கு வடக்கிலும், திருநாவலூர் வாய்க்காலுக்குத் தெற்கிலும் நிலம் கொடுக்கப் பட்டிருந்த செய்தியை மூன்றும் இராசராசனது பத்தாம் ஆண்டுக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. அம்மன் கோவிலைக் கட்டிய திம்மப்பர் கோயிலில் சேவகம் செய்வதற்கு நால்வரை நியமித்து அவர்களுக்குச் சர்வமான்யமாக நிலமும் அளித்துள்ளனர்.

குலசேகர பாண்டியன் காலத்தில் அளிக்கப் பெற்ற நிபந்தங்கள்.

குலசேகர பாண்டியனின் ஆட்சியாண்டு இருபத்திரண்டில் கற்கட நாயிற்றுப் பூர்வபக்ஷத்துப் பிரதமையும் வியாழக்கிழமையும் பெற்ற பூசத்து நாளில், இராசேந்திர சோழவளநாட்டு, வெண்டாழை நாட்டு, அரசு வரகூருடையான் சொக்கநாயனை விசைய கண்ட கோபாலன், ஆவிக்கோட்டையில் பிள்ளையார் சொக்க விநாயகப்பிள்ளையார்க்கு இறையிலியாக, தன் காணிப் பற்றான, தென்புரணி ராஜராஜ வளநாட்டுத் தாயிலும் நல்லான் கோட்டையில், ஸ்ரீ தேவி வதிக்கு மேற்கு, கண்டராதித்த வாய்க்காலுக்கு வடக்கு மேற்கடைய, தடி (வயல்) பலவற்றால் நிலம் மூன்றையும், மூன்றும் சதுரத்துண்டத்து வயல் இரண்டினால் அரையும் ஆக இந்நிலம் நான்கையும் கொடுத்துள்ளான்.

மேற்படி பாண்டியனின் அதேயாண்டில் பொறிக் கப்பெற்ற கல்வெட்டின் சில பகுதிகள் தட்சிணா மூர்த்திப் படிக்கட்டில் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. அதுவும் நிலம் கொடுத்ததைக் குறிப்பிடுகின்றது.

அச்சுத தேவராயர் காலத்தில் கொடுக்கப்பெற்ற நிவந்தம்.

கோயன்பேடு நரசிமஹ முதலியார் மகன் பள்ளி கொண்ட முதலியார், கீழ்ப்பற்று மூள்ளியாற்றுப் பாய்ச்சலான காடுவாகுடியைத் திருமேற்கோட்டைத் திருமெய்ஞ்ஞான முடையார்க்குத் தேவதானமாகவும், அச்சுத தேவராயர் தன்மமாகவும் கொடுத்துள்ளனர்.

குறிப்பு:—

தேவதானம் என்றால் கோயிலுக்குச் சொந்தமாகக் கொடுக்கப்பட்ட நிலமாகும். இது நடந்தது துன்மதி வருடம் தை மாதம் இருபதாம் தேதி மகர நாயிற்றுப் பூர்வ பக்ஷத்துப் பிரதமையும் சோம வாரமும் பெற்ற சங்கிரம புண்ணிய காலமாகும். இது முக்கியமான ஒரு கல்வெட்டு ஆதலின், இக்கல்வெட்டின் மூலம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

(வரி) 1. ஸ்வஸ்திஸ்ரீ துன்மதிவருஷ தைமீ 20உ மகர நாயிற்று பூர்வ பக்ஷத்து

,, 2. பிரதமையும் சோமவாரமும் பெற்ற சங்கிரம புண்ணிய காலத்திலே இராயர்

,, 3. அச்சுத தேவ மகாராயர் தன்மமாக கோயன் பேடுநரசிம்ஹ முதலியார் புத்திரன் பள்ளி கொண்ட முதலியார்.

,, 4. புண்ணியமாக கீழ் பற்று மூள்ளியாற்றுப் பாய்ச்சலான காடுவாகுடி திருமேற் கோட்டை உடையார்.

,, 5. தமக்கு நாயனார்க்கு தேவதானம் ஆக சேத்தபடியால் சந்திராதித்த வரையும் செல்ல சர்வமாணியம் ஆக.

,, 6. அனுபவித்துக்கொள்ள......................இதுக்கு அகுதம் பண்ணினவன் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற தோஷத்தைப் பெறக்கடவதாகவும்.

சகாப்தம் 1476 இன் மேல் செல்லாநின்ற ஆனந்த வருடம் தை மாதத்தில் (அதாவது 1476 + 78) கி. பி. 1554ல் தொண்டைமண்டலம் வெங்கப்பையயன் தன் மமாக, பள்ளிப்பட்டூர் வீற்றிருந்தார் புத்தநயினர் பிள்ளை என்பவர், இத்திருமெய்ஞ்ஞான முடையார் தேவதான மாக, நடுவில் களப்பாளில் நிலம் ஒன்றரையும், மனை ஒன்றையும், குளம் ஒன்றையும் கொடுத்துள்ளனர். அவைகளின் வருவாயைக் கொண்டு சிவபெருமானுக்கு நாள்ஒன்றுக்கு முக்குறுணி அமுதுபடிக்கும், கோயில் தர்மகர்த்தாவுக்கு நாள்தோறும் ஒரு நாழி அரிசிக்குப் பிரசாதமும், எஞ்சி நின்ற அறு நாழிப்பிரசாதங்களுக்கு நந்தன வனக்காரனுக்கு மூநாழியும், காணம் வண்டாழை நாட்டு நம்பிக்கு உரியும், சோமாசி நம்பிக்கு உரியும், முதலியாருக்கு உரியும், மாடாபத்தியம பார்ப்பார்க்கு உரியும், கண்காணி செய்வார்க்கு உரியும், மெய்காவலுக்கு உரியும் கொடுக்கும்படியாக ஏற்பாடு கள் செய்யப்பட்டிருந்தன.

[கரணம் = கணக்குப்பிள்ளை. உரி = $\frac{1}{2}$படி.]

சரித்திரப் பகுதி.

இக் கோயில் மகாமண்டபத்தில் கல்வெட்டுகள் பொறிக்கப் பெற்ற தூண் ஒன்று இருக்கின்றது. அத் தூண் தலைப்புமாற்றி நிறுத்தப்பட்டுள்ளது. அக் கல்வெட்டு தென்கரை பிர்மதேயம், பழைய ஸ்ரீ செம்பியன் மாதேவி சதுர்ப்பேதிமங்கலத்து மகாசபையார், புரவூர் எலேயூர் கிழவன் பரகேசரி விழுப்பரையர்க்கு, கொற்றநல்லூரில் குலமாணிக்கப்பேரேரியால் நீர் பாயப்பெற்ற நிலத்தை விலையாவணம் செய்துகொடுத்த

தோடு, அங்கிலக்கிரயப்பொருளையும், இறைகாவலுக்கு வேண்டும் பொருளையும் பெற்றதை உணர்த்துகின்றது.

இதை உணர்த்தும் அக் கல்வெட்டு முதலாம் இராச ராசசோழன் காலத்தில் பொறிக்கப்பெற்றதாகும். அதில் அம்மன்னன், சாலை கலம் அறுத்த கோ இராஜ ராஜ கேசரிவர்மன் என்று குறிக்கப்பெற்றுள்ளான். இங்ஙனம் அம்மன்னனைப்பற்றி, வேறு பல இடங்களில் உள்ள கல்வெட்டுகளிலும் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இங்குள்ள அதே கல்வெட்டில் அந்த முதல் இராச மன்னனை நடுவில் குறிப்பிட வந்தபொழுது, "**மதிலேறி எழுந்தருளின** கோராஜகேசரிவர்மற்கு யாண்டு நாலாவது"—என்று தீட்டப்பட்டுள்ளது. இது அம்மன்னனைப்பற்றி ஆராய்வாரின் கவனத்தை இழுக்கக் கூடிய ஓர் அரிய செய்தியாகும்.

இக் கோயிலில், கோமாறபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் புவனேகவீரன் குலசேகரபாண்டியன் காலத்தில் ஏற்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவற்றுள் **மாறபன்மன்** என்ற தொடர், மாறவர்மன் என்றும் வருவதுண்டு. இது பாண்டியமன்னர்கள் தரித்துவந்த மாறவர்மன், சடையவர்மன், என்ற பட்டப் பெயர்களுள் ஒன்றாகும். இப்பட்டப்பெயர் இன்னார்க்குப்பின் இன்னார் பட்டம் எய்தினர் என்பதைக் குறிக்கும், அம்முறையில் குலசேகரன், **மாறவர்மன்** என்ற பட்டத்தைத் தரித்திருந்தான். திரிபுவனச் சக்ரவர்த்திகள் என்பது சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்குச் சக்ரவர்த்தி என்று பொருள்படும். புவனேக வீரன் என்பது பூமியில் தனித்த வீரன் என்னும் கருத்துடையதாகும்.

இப்பட்டங்களையுடைய குலசேகரன் பாண்டியன் கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படுவதால், மூன்ரும் இராசராசசோழன் காலத்திற்குப் பின்பு, இந் நாட்டில், பாண்டிய மன்னர்களின் ஆட்சி நடந்து வந்தது புலனுகும்.

விஜய நகரபரம்பரை அரசரான அச்சுததேவமகாராயர் காலத்துக் கல்வெட்டு இக்கோயிலில் இருப்பதால் பாண்டியர்க்குப்பின் இந்நாட்டில் விஜயநகர அரசர் ஆட்சி நிலவிய செய்தி விளங்குகின்றது.

இவ்வூரைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு.

முதற் குலோத்துங்க சோழமன்னன் கல்வெட்டில் (கி. பி. 1070—1120) இவ்வூர் இராசேந்திர சோழவள நாட்டு, தென கரம்பை நாட்டுப் பிரமதேசம் குலோத்துங்க சோழசதுர்ப்பேதிமங்கலத்து மேல்பிடாகை திருமெய்ஞான முடையார் கோயில் என்று குறிக்கப்பெற்றுள்ளது

(சதுர்ப்பேதிமங்கலம் என்பது சில சிற்றூர்களைத் தன்னகத்துக் கொண்டதாகும். பிடாகை—என்பது சிற்றூர்)

மூன்ரும் இராசராசசோழனுடைய கல்வெட்டு இவ்வூரை, **திருமையான** மும்முடி சோழநல்லூர் என்று குறிப்பிடுகின்றது. எனவே திருமெய்ஞானம் என்பதே இவ்வூரின் பழம் பெயராகும். அது மரூஉ மொழியாக **திருமை** என்று வந்துள்ளது. அதன் பின்னர், திருமை என்பது திருமேல்கோட்டை என்றும் அது பின்னர் திருமக்கோட்டை என்றும் இவ்வாறு சிதைந்து வழங்கலாயிற்று. சிவபெருமான் திருப்பெயராகிய திருமெய்ஞ் ஞானமுடையார்—என்பதும் சிதைந்து மிய்க்கநாத

சுவாமி என்றும் வழங்கப்பட்டுள்ளது. பிற்காலத்தில் திருமேல்கோட்டை என்னும் இவ்வூர் வண்டாழை நாட்டுக்கு உட்பட்ட ஒரு சிறு நாடாக விளங்கிற்று. அந் நாடு திருமேல்கோட்டை நாடு என்னும் பெயருடன் விளங்கிற்று என்பதை ஒரு கல்வெட்டு கூறுகின்றது. இக்கோயிலுக்குரிய பிற்காலத்துச் செப்பேடு, இதைத் திருமேல்கோட்டை மாகாணம் என்றும் குறிப்பிடு கின்றது.

இத்திருமேல் கோட்டை நாட்டார், பாலையூரான பூபதிராயபுரத்து மகாசனங்களிடமிருந்து நாட்டுப் பாது காவலுக்கு எப்பொழுதும் விதை அல்லது தான்யமாகப் பாதுகாவல் வரி வாங்கிவந்ததோடு, பணப்பாதுகாவ லும் வாங்கிவந்தார்கள். அப்பொழுது பணப்பாது காவல் வேண்டாமென்றும், பழமைபோல் விதையாகவே பாதுகாவல் வரியை வாங்கினால் போதுமென்றும், பாலை யூர் வாசிகள் முறையிட, திருமேல்கோட்டை நாட்டா ரும் அங்ஙனமே செய்வதாகப் பாலையூர்வாசிகளுக்குக் கூறி, அர்த்த உதய புண்ணியகாலத்தில் மெய்க்கு நாய னார் சந்நிதியிலே நீர்வார்த்தும், பட்டயமாகக்கொடுத் தும் கோயில் குமுதப்படையில் அதைக்கல்லில் வெட்ட வும் செய்துள்ளனர். இந் நிகழ்ச்சி விரோதிகிருதுவரு தைமீ 2உ நிகழ்ந்ததாகும். [இதிலும் சாலிவாகன சகாப்தம் குறிக்கப்படவில்லை]

இதனால் நாட்டுப்பாதுகாவலுக்கென்று, குடிமக் களிடமிருந்து, பண்டைக்காலத்தில் வரிவசூலிக்கப்பட்ட தென்றும், அவ்வரி மக்களுக்குக் கஷ்டமில்லாமல் விளை யும் தான்யமாகவே வசூலிக்கப்பட்டு வந்தது என்றும் பெறப்படுகின்றது.

Copper Plate No. I (செப்புப் பட்டயம்)

(முதல் பக்கம்)

சாலியவாகந சகாப்தம்* சத்சா௭௰கக்கு மேல் செல்லாநின்ற கிலக வருழம் தைய் மாதம் ௰௨ம் திரு மெற்கோட்டை சுவாமியார் மெய்க்குதை சுவாமியாருக்கு ராசமாணியராய ஸ்ரீ சரபொசி மகாராசசாயபு அவர்கள் சீமையில் பட்டுக்கொட்டை சசுபையில் மதுக்கூர் சீமையில் பெரியகொட்டை மாகாணம் ராசஸ்ரீ காலு சாயபு அவர்கள் ராசஸ்ரீ சிங்கார பண்டிதர் அவர்கள் அபாலுதார் 2 கந்தாச்சியா பிள்ளை குடியானபேர்கள் தருமத்துக்கு தாம்புர சாதனம் பண்ணிக்கொடுத்தபடி எங்கள் மாகாணத்தில் ஆவிக்கொட்டை, கழிச்சாங்கொட்டை, உலையக்குன்றம், கனியாகுரிச்சி, சொக்கநாதநல்லூர் யிந்த அஞ்சு கிருமமும் நஞ்சை புஞ்சை கண்டுமுதலுக்கு அரமணைக்கும் குடிக்கும் பொதுவிலெகலத்துக்கு நாழியும் குடுத்து சந்திராதித்தர் உள்ள வரைக்கும் நாங்களெ நடப்பிக்க கடவொராகவும் இயிந்தப்படிக்கு யின்ததருமத்துக்கு பரிடாலம் பண்ணின பெருக்கு காசியிலெ அன்னதானம் பண்ணின பலம் அசுபமெதியாகம் பணின பலனும் உண்டு. இந்த தருமத்துக்கு யிந்த தருமத்தை யாதொருவன் விக்கிணம் பண்ணினாருகில் அவன் கெங்கைக் கரையிலெ காறம் பசுவை கொன்ற தொழத்திலெ

---

*இது, ஆயிரத்து நானூற்று எழுபது ஆகும். முதல் இரு எழுத்துக்கள் ஆயிரத்தைக் குறிப்பதாகும். பட்டயத்தில் அவ்வாறு இருப்பது எழுதினவரால் நேர்ந்த பிழை. இப்பட்டயம் தோன்றியகாலம் கி. பி. 1548. அதாவது இற்றைக்கு 405 ஆண்டுகளுக்குமுன்.

பொவான் யிந்தபடிக்கு அபாலுதார் உகந்தாச்சியா பிள்ளை உலையக்கொன்றம் குண்ணப்ப தேவர் ஆவிக் கோட்டை நல்லவ நாடன் கலிக்க நாடன் கணியா குறிச்சி வாலாமுத்து தெவர் நல்லகுட்டி தேவர் கழிச் சரங்கோட்டை கஞ்சமலை தெவர் சிதம்பர தெவர் சொக்கநாதநல்லூர் ஆதியப்ப தெவர் திருமலைக் கொழுந்தா பிள்ளை குப்ப தெவர் லெட்சுமண தெவர் அய்யா முதலியார்

கீலக வருஷம் மார்கழிமீ ௰உ திருமெய் கொட் டையீசுரர் கொயில் மெய்க்குநாத சுவாமியாருக்கு வாவாசிகொட்டை ஆகாசன் செருவைகாறர் அவர்கள் குமாரன் உடையப்பன் சேருவைகாறர் அவர்கள் ரெகு நாதன் செருவைகாறர் அவர்கள் ஊரு ஆவர்கள் அறத சாமக்கட்டளைக்கு தறம சாதநப்பட்டையம் குடுத்தபடி எங்கள் கிறுமம் கண்டுமுதல் நஞ்சை பிஞ்சைக்கும் அரமணைக்கும் குடிக்கும் பொதுவிலெணுத்திக்கலத் துக்கு எட்டு மாக்கால் முன்ளுழி பத்திக்கொண்டு அறத சாமக்கட்டளை நடப்பிக கடவொராகவும் யிந்தபடிக்கு ரெகுநாதன் செருவைகாறர் அவர்கள் ஊரு அவர்கள்

(செப்புப்பட்டயம் பக்கம் 2)

சொல்லுபடி ஊரு கணக்கு வைத்தியநாத பிள்ளை இந்த தருமத்தை யாதாமொருவன் பரிபாலநம் பண்ணினவர் கள் காசியிலெ அசுபமெதியாகம் பண்ணின பலன் உண்டு. இந்த தறமத்தையாதொருவன் விகாதம் பண்ணி நாளுகில் அவன் கெங்கைக் கரையிலெ காராம்பசுவை கொண்ண தொழத்திலெ பொவான்.

ஸ்ரீமுகளுஸ ஆடிமீ உஉ திருமக்கொட்டை ஈசுரான் கோவில் கட்டளையாருக்கு கொவிந்த நத்தலிருக்கும்

திருமதெவர் குமாரன் கூத்தப் பெருமாள் தெவர் ருரும தெவர் குமாரன் லெச்சுமதெவர் அடைக்க தெவர் ஐரு நாயண தெவர் ருமலிங்க தெவர் உள்பட்டாரென தறம சாதனப் படையம் குடுத்தபடி யெங்களூர் சித்தி விநாயகப் பிள்ளையாருக்கு பூசை நெயிவேத்தியத்துக்கு ஞங்கள் பிஞ்சையில் நிலம் விட்டது. சந்தை வெளி குளத்துக்கு கீழக்கு தேன்புரையில் யெல்லைக்கு மேற்கு பாலையக்கோட்டை யெல்லைச்கு வடக்குயிருவசது ஞலடி கோலாலே குளிஉத்து; இந்த ரெண்டாயிரங் குழியும் பயிர் ருட்டு குடிவாரம் குடியான போக்கு விட்டு மெல்வாரம் அனுபவிச்சுக் கோள்வது. சந்திராள் சூரியாள் உள்ள மட்டுக்கும் அனுபவிச்சுக் கொள்வது ராச ஸ்ரீ பிள்ளைப் பெருமா பிள்ளை ஞணையில்ப் பண்ணினது பிள்ளையா ருக்கு தினம் இருநாழி அரிசி நெயிவெத்தியமும் சுக்கிற வார வட்டம் நல்லெண்ணை வகையரு திருமஞ்சன திர வியம் மாதம் ஒரு சேர் திருவிளக்கெண்ணை வகையரு குடுத்து பூசை நெயி நெயிவேத்தியம் பண்ணிவிக்கிறது. இந்த தறமமத்தை பரிபாலனம் பண்ணின பெர் அசுவ மெதயாகம் பண்ணின பலத்தை அடைவார்கள் இந்த தறமத்துக்கு யாதாமொருவன் விகாதம் பண்ணினவன் கெங்கைக் கரையிலெ காராம் பசுவைக் கொண்ண தொழத்திலெ பொவான், உ சிவமயம் உ சித்திவிநாயகன் துணை.

Copper Plate No. II

செப்புப் பட்டையம் II. (பக்கம் 1)

பிரபவஸ்ரீ வைகாசிமீ 20உ ஆதித்தவாரமும், திரையோதசியும் சுவாதி நட்சத்திரமும் கூடிய புண்ணிய தினத்தில் திருமக்கோட்டை மிய்க்குநாத சுவாமி

யாருக்கு திருமக்கோட்டை மாகாணம் மகாசனங்களும் நாட்டாரும் சகல சனங்களும் சம்மதித்து தாம்புர சாதனம் பண்ணிக்குடுத்தபடி யெங்கள் மாகாணத்திலே உச்சிக்கால கட்டளையும் கயிலாச வாகன மண்டபப்படி யும் எங்கள் உபையமான படியினாலே இதுக்கு நாங்கள் மாகாணத்திலே மகமை பண்ணிக் கொடுத்தது. நஞ்சைக்கு மாகாணம் கண்டுமுதலுக்கு நூற்றுக்குப் பதக்கு நெல்லு குடிவாரத்தில் கொடுத்து மேல் முகம் புஞ்சைக்கு மண்டகப்படிக்கு புஞ்சையில் தீர்வை பட்டணத்துக்கு பத்துப்பொன்னுக்கு ஒரு பணமும் கீழ முகம் புஞ்சைக்கு முன் ஆதியாய் நடந்த வர்த்தனை யும் இதுக்கு விபரம் ஈஸ்வரன் கோயில் உச்சிக்காலக் கட்டளைக்கு நஞ்சையில் இரண்டுபங்கும், பெருமாளுக்கு உச்சிக்காலக் கட்டளைக்கு நஞ்சையில் மூணத்தொண் ணூம், கீழ்முகம் புஞ்சையில் மகமை பணம் கயிலாச வாகன மண்டகப்படி மேல்முகம் புஞ்சை மகமைப் பணமும்,முன் நடந்த பிரதோஷ கட்டளைக்கு நோட்டக் காரன் உ.யிந்தபடி இச் சந்திர சூரியாள் உள்

(பக்கம் 2)

ளவும் நாங்களே நடப்பிக்கடவோமாகவும் இந்தப் படி இந்த தர்மத்தை பரிபாலனம் பண்ணுகுற பெருமு காசியிலே அன்னதானம் பண்ணின பலனும் அசுவ மேத யாகம் பண்ணின பலனும் உண்டு. இந்த சாதனத் துக்கு யாதா ஒருதன விகாத பண்ணினுகில் கங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவான். யிந்தப்பட்டயம் எழுதினது மாகாண மகா சனங்கள், நாட்டார், சகல சனங்களும் சொல்படி இந்தப் பட்டயம் எழுதினது. தெரு வேலை பண்ணின

வயித்தி ஆசாரி எழுத்து. உள்ளூர் மகாசனங்கள், நாட்டார், தென்புரை மகா சனங்கள், படுகைக் கழுவத்து மகாசனம், தலையாமங்கல சோழபாண்டி மகாசனங்கள், உரத்தூர் கடைத்தெரு, வாட்டாறு, பள்ளிச்சந்தம், சொடுதலைக்காடு, பண்டாரவாடை, கழுவத்தூர், பெருமடமருதூர், தெற்கு மண்ணு, இமுண்டவடக்கு மண்று, இமன்று திருமஞ்சநபுரம் கருபுதிளா கோவிந்த நத்தம் மாங்கோட்டை நத்தம் வல்லூர் உள்நத்தம் மேல்நத்தம் ௨ சுபமஸ்து.

உ

திருமக்கோட்டை ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் திருக்கோயில் கல்வெட்டுக்களின் மூலங்கள்.

கல்வெட்டு I.

இடம்:— கர்ப்ப இல், அர்த்தமண்டபம் இவைகளின் தென்புறச் சுவர்.

வரி 1: *சுவஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள், ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு முப்பத்தொன்று. இரா(ஜ) ரா(ஜ)க்காடு வெட்டி ஓலை:— திருமைப்யில் உடை யார் திருமெய்யான முடையார் கோயில் தெற்கில் திருவீதியில் மடத்தில், திருவாரூரில் வடக்கிலம்— மடத்தில் முதலியார் பள — —களில் இருக்கும் நல்லிசையாள் கண்டு காரியமாவது முதலியார்க்கு இம்மடம் இக்கோயில் தானத்தார் குடுத்தமையில் என் காணியான வடுவூர் வய*

2 *லில் குலோத்துங்க சோழ பூ பெரையன் சேவகப் பெ இந்நிலத்துக்கு வடக்கும் பெரிய தூம்பு கண்ணாற்றுக்கு வடக்கும் பெருவழி வரம்புக்குக் கிழக்கும் ஊர்பற்றுக்குத் தெற்கும் நடுப்பட்ட நிலம் நான்கு மா இந்நிலம் நாலுமாவும் இந் நிலத்துக்கு எப்பேர்பட்ட இறையிலி விநியோகங் களும் பொன்வரிப் பிடிக்கு நெல்லும் இழந்து அரைசுகூலி பாடிகாவல்,*

3 *ஆட்டைக்கு கலம் நெல்லு அளக்கவும் ஏரியில் நீருரிமை பெறவும் இப்படி இறையிலியாகக் குடுத்தேன். கற்பகப்பெருமாளான இரா(ஜ) ரா(ஜ)க்காடு வெட்டியேன். இவையென் கை யெழுத்து.*

கல்வட்டு II

இடம்:— கர்ப்பஇல், அர்த்தமண்டபம் இவைகளின் தென்புறச் சுவர்கள்.

வரி 1: சுவஸ்திஸ்ரீ சகாத்தம் 1476ன் மேல் செல்லாநின்ற ஆனந்தவூ தை மாதம் முப்பதில் நயினார் மெய்க்கு நயினார்க்கு தொண்டை மண்டலம் வெங்கப்பா வய்யன் தன்மமாக பள்ளிப்பட்டூர் வீற்றிருந்தார் பிள்ளை புத்த

2 நயினார் பிள்ளை மெய்க்கு நயினாற்குத் தன்மமாக இந்நாயனார் தேவதானமான நடுவிற்களப்பாளில் ஆனைத்தரன் பரையர் நிருதல்வர் ஆகக்கொண்டு சேத்தநிலம் ஒன்றரையும், மனை ஒன்றும், குளம் ஒன்றும்

3 வையந் தொழுதார் நீருத நிலம்கொண்டு தம்பிராநாற்கு தத்தி ஓஹநத்துக்கு நாள் ஒன்றினுக்கு முக்குறுணி அமுதுபடியும் நைவேத்தியம் பண்ணி இதிலே கொண்டு சேத்த தன்மகத்தாவுக்கு தினம் ஒன்றுக்கு இரண்டு நாழி

4 பிரசாதமும் குடுத்து நின்ற அறு நாழி பிரசாதமும் நந்தவனத்துக்கு முன்னுழியும் கரணம் வண்டாய நாட்டு நம்பிக்கு உரியும், சோமாசி நம்பிக்கு உரியும் முதலியார்க்கு உரியும் மாடாபத்திய

5 த்துக்கு உரியும் கண்காணி உரியும், மெய்காவலுக்கு உரியும் ஆக சந்திராதித்தவல் வரையும் நடக்கவும் இத்தன்மத்துக்கு அகுதம் பண்ணினவன் கங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற பாவத்திலே

6 போகக்கடவராகவும், தன் மா தா பிதாவைக் கொன்ற பாவத்திலே போகக்கடவாராகவும்.

கல்வெட்டு III.

இடம்:— கர்ப்ப இல்லின் மேற்கு தென்புறச் சுவர்.

வரி 1: ஸ்வஸ்திஸ்ரீ துன்மதிவஷ தைமீ 20உ மகரநாயிற்று பூர்வபக்ஷத்து

2 பிரதமையும் சோமவாரமும் பெற்ற சங்கிரம புண்ணிய காலத்திலே இராயர்

3 அச்சுதேவ மகாராயர் தன்மமாக கோயன்பேடு நரசிம்ஹ முதலியார் புத்திரன் பள்ளிகொண்ட முதலியார்

4 புண்ணியமாக கீழ்பற்று முள்ளியாற்று பாய்ச்ச லான காடுவாகுடி திருமேற்கோட்டை உடையார்

5 தமக்கு நாயனுர்க்கு தேவதானமாக சேர்த்தபடி யால் சந்திராதித்தவரையும் செல்ல சர்வமானியம் ஆக,

6 அநுபவித்துக்கொள் .... இதுக்கு அகுதம் பண்ணினவன் கங்கைக்கரையிய் காராம் பசுவைக் கொன்ற தோஷத்தைப் பெறக்கடவதாகவும்.

கல்வெட்டு IV

இடம்:— சர்ப்ப இல்லின் மேற்குப்புறச் சுவர்.

வரி 1: ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ புவனேக வீரரான குலசேகர தேவற்குயாண்டு இருபத்திரண்டாவது கற்கட நாயிற்று பூர்வபக்ஷத்து

2 பிரதமையும் வியாழக்கிழமையும் பெற்ற பூசத்து நாள் இராசேந்திர சோழவள நாட்டு வண்டாழை நாட்டு அரசு கனேகூருடையான் மெய்க்குந்தே

3 சொக்க நாயனை விசையகண்ட கோபாலனேன் ஆவிக்கோட்டையில் பிள்ளையார் சொக்க விநாயக பிள்ளையார்க்கு இறையிலியாக

4 பண்ணிக் குடுத்த பரிசாவது என் காணிப்பற்ருன தென்புரணி ராஜ ராஜ வளநாட்டு தாயிலும் நல்லான் கோட்டை ஸ்ரீ தேவிவதிக்கு மேற்கு

5 கண்டராதித்த வாய்க்காலுக்கு வடக்கு 2-ஆம் சதிரத்து மேற்கடையதடி பலவிஞல் நிலம் மூன்றரை மூன்ரும் சதிரத்துண்டத்து கீழ்க்கடையதடி இரண்டிஞல் நிலம் அரை. ஆக நிலம் நான்கு. இந்நிலம் நாலும் .... கு நா

6 ள் முதல் சந்திராதித்தவரையும் இறையிலி தேவ தானமாகக் குடுத்தேன். சொக்கவிஞயகப் பிள்ளையார்க்கு விசையகண்ட கோபாலனேன். இப்படிக்கு இவை விசையகண்ட கோபாலனேன் எழுத்து.

கல்வெட்டு V

இடம்:— கர்ப்ப இல்லின் மேற்குபுரச் சுவர்.

வரி 1: சுவஸ்தி ஸ்ரீ கோமாறபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலசேகர தேவற்குயாண்டு இருபத்திரண்டாவது கற்கடநாயிற்று பூர்வ பக்ஷத்து பிரதமையும் பெற்ற பூசத்து நாள் இராசேந்திர சோழ வளநாட்டு வெண்டாழை நாட்டு அரசு வரகூருடையான் (Built in)

2 க்கடவார்களாகவும் இப்படி குடுத்த இறையிலிகள் இவர்கள் வேண்டினபடி உரனம் பண்ணியும் விற்றும் ஒற்றி வைத்தும், வேண்டினர்க்கு கொடுத்தும் கொள்ளக் கடவார்களாகவும் இப்படி

சம்மதித்து கல்வெட்டிக் கொடுத்தேன். விசைய கண்ட கோபாலனேன். இப்படி ஒழிய இந்த இறை — — — (Built in)

கல்வெட்டு VI

இடம்:— கர்ப்ப இல்லின் மேற்குபுறச்சுவர்.

வரி 1: சுவஸ்தி ஸ்ரீ திரிபுவனக்காடுவெட்டி ஓலை. திருமையில் உடையார் — — — கோயில் தெற்கில் திருவீதியில் மடத்தில் திருவாரூரில் வடக்கில் மடத்து முதலியார் பிள்ளைகளில் — — — க்கும் நல்

2 விசையாளி முதலியார் கண்டு காரியமாவது. இக் கோயில் தானத்தார் — — — தந்த — — — மடத்துக்கு இறையிலியாக என் காணியான வழுவூர் வயலில் அகம்படிப் பெருவண்ணான் இருவரும் பெற்ற அநிலத்துக்கு இ

3 ம்மடத்துக்கு இரா (ஜ) ரா (ஜ)க் காடுவெட்டியார் குடுத்த நிலத்துக்கு வடக்கும் பெரு — — —க்கும் ஏரியில் நீர்போகிற கண்ணாற்றுக்குத் தெற்கும் நடுவுட்பட்ட நிலம் ஒரு மா. இந்நிலம் ஒரு மாவும் திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராசராச தேவர்க்குய

4 ாண்டு முப்பத்தொன்றுவது முதல் மடப்புற இறையிலியாக இட்டமையில் இந்நிலத்துக்கு எப்பேர்ப்பட்ட இறையிலி விநியோகங்களும் பொன் வரிப் படிக்கும் நெல்லும் இழந்து அரைசுகூலி பாடிகாவலுக்கு ஆட்டைக்கு கலநெல் அளக்கவும். ஏ

5 ரியில் நீர் உரிமை பெறவும். இப்படி இறையிலி இட்டேன். இவை திரிபுவனக் காடுவெட்டி எழுத்து.

கல்வெட்டு VII

இடம்:— கர்ப்ப இல்லின் மேற்குப்புறச் சுவர்.

வரி 1: சுவஸ்தி ஸ்ரீ விரோதி வருஷம் தை மாதம் 2உ பாலையூரான பூபதிராய புரத்து மகாஜனத்துக்கு வெண்டாழை நாட்டு திருமேல்கோட்டை நாட்டு மனுஷராம்.

2 அர்த்தோதைய புண்ணிய காலத்திலே மெய்க்கு நயினார் சன்னதியிலே உதகம் பண்ணி தன்மசாதன பட்டயமாகக் குடுத்து திருக்கோயில் குமுதப் படையில் கல்வெட்டி

3 முன் இந்நாட்டு பாது காவலுக்கு எப்பொழுதும் விரைப்பாது காவலாக வாங்கிவருகிறதல்லாமல் பணப்பாதுகாவலும் வாங்கி வருகையில் அப் பொழுதும் பணப்பாதுகாவல்

4 வேண்டாமென்று உதகம் பண்ணி விரைப்பாது காவலே பூர்வம் ஆற்றிய படியே, கட்டளை இட்ட படியாலே இந்த நிறையத்திலே சந்திராதித்த வரை நடத்தக் கடவோமாகவும்.

5 இந்த தருமத்துக்கு அகுதம் பண்ணினவன் கங்கைக் கரையிலே கோவதையும் பிர்மஹத்தியும் பண்ணின தோஷத்திலும் குருவைக்கொன்ற தோஷத்திலும் போகக்கடவனாகவும்.

கல்வெட்டு VIII

இடம்:— கர்ப்ப இல்லின் வடபுறச் சுவர்.

ஈசுர புரட்டாதி 15உ மெய்க்கு நாயிறுக்கு விளக்குடிஆக உதயன புண்ணிய கால்த்திலே சேவகப் பெருமாள் பிள்ளை திருமேற்கோட்டை இதற்கு என்னை தம்முடைய தன்மமாக (Incomplete)

கல்வெட்டு IX

இடம்:— கர்ப்ப இல்லின் வடபுறச் சுவர்.

வரி 1: சுபானு வருஷம் கார்த்திகை மாதம் பத்தாம் தேதி பூர்வ பக்ஷத்து அஷ்டமியும் பெற்ற சோமவாரத்து நாள் வண்டாழை நாட்டு திருமேற்கோட்டை நயினர்.

2 மெய்க்கு நயினர் கோயில் நாச்சியார் பெரிய நாச்சியாரை மல்லு இராவுத்தன் புத்திரன் திம்மப்பர்தன்மம் நவம் ஆக உண்டாகத் திருக் கோயி — — —

3 கட்டிவித்து முன்னுக்கும் திருப்பணி நடத்தி நிமந்தக்காரரையும் கல் தச்சனையும் பதிவித்து — — — தெ — — — மமைய

4 இந்த பெறகு விபரம் முதல் அடைப்பு மெய்யாள் இரண்டாம் அடைப்புக்கு ஆவுடைச்சியும்

5 மூன்ரும் அடைப்புக்கு திருமஞ்சிமகள் அழகியாளையும் பதிவித்து இந்த பெறகு பேர் ஒன்றுக்கு நிலம் கால் ஆக பேர் நாலுக்கு.

6 நிலம் ஒன்று. இதுவும் பேர் ஒன்றுக்கு மாடு ஓர் வண்டி ஆக ஓர் நாலுக்கு எருது நாலு ஆக இந்த மாடும் நிலமும் சந்திராதித்தவரை.

7 யும் செல்ல சர்வமாணியமாக அனுபவித்துக் கொண்டு கோயில் சேவகம் செய்வித்து.

55186

பாரதி பிரஸ், மன்னர்குடி. Or. 8257 C. 300.